[1975 மார்ச் 19

THIRU B. VENKATASWAMY : Sir, the present indiscipline among the students is due to non-imparting of moral instruction in the schools. So, may I know from the Hon. Minister whether moral instruction would be imparted every day in primary and higher secondary schools ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பீரியட் என்பது முடியாது. காரணம் மற்ற மற்ற பாடங்களுக்கு இப்போது நேரம் போதவில்லை என்று சொல்கிறார்கள். ஆங்கிலமொழி, கணக்கு, அறிவியல் பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கே நேரமில்லை என்று சொல்லப்படுகிறது. அநேக பள்ளிக் கூடங்களிலே பள்ளி நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலே காலையில் வணக்கத்திற்குரிய வகுப்பு என்றோ அல்லது வாழ்த்துக்குரிய வகுப்பு என்றோ அல்லது இறை வணக்கத்திற்குரிய வகுப்பு என்றோ அரை மணி நேரம் முன்னதாக தொடங்கி ஒழுக்க நெறியைக் கற்றுத்தருகின்ற முறையை சில பல பள்ளிகளில் கடைப் பிடித்து வருகிறார்கள்.

THIRUMATHI ALDA M. FOWLER : Sir, may I know if these instructions would include the teaching of good manners and courtesy also because we find nowadays, that youngsters do not know how to give up their seats to grown-ups and how to move out of the way when elders are passing them ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று மாணவர்கள் ஒழுக்க நெறியோடு நடந்து கொள்ள வேண்டும், ஒழுக்கத்தோடு பழக வேண்டுமென்ற வகையிலே இப்படிப்பட்ட ஒழுக்கக் கல்வி போதிக்கின்ற முறை இருக்கின்றது. ஆனால் மதக் கல்வி போதிக்கப்படக் கூடாது என்று தடையிருக்கிறது. பொதுவாக, ஒழுக்கக் கல்விபற்றி போதிக்கலாம். மதக்கல்வி சொல்லித்தர வேண்டுமென்றால் தனியாக வைத்து யார் விரும்புகிறார்களோ அவர்கள் வேறு எங்காவது வைக்கலாம். பள்ளிகளைப் பொறுத்தவரையில் மதக் கல்வி போதனை கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று அவர்களுடைய பழக்கங்கள் நடவடிக்கைகள் சீர்படுத்தப்படுகின்ற வகையிலேதான் இப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்திய முறை மருத்துவக் கல்லூரி.

*374 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழ்நாட்டில் மேலும் ஒரு இந்திய மருத்துவக் கல்விக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை,